**18.** மேற்கொள்ளப்பட்ட நலத்திட்ட நடவடிக்கைகள்:—

(i) 1951 ஆம் ஆண்டு மலைத்தோட்டப்பயிர் தொழிலாளர்கள் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் படி உணவகம் செயல்படுகிறதா :

(அ) சமைக்கப்பட்ட உணவு மற்றும் சிற்றுண்டி, முதலியன வழங்கப்படுகிறதா :

(ஆ) சமைக்கப்பட்ட உணவு மட்டும் வழங்கப்படுகிறதா :

(இ) சிற்றுண்டி மட்டும் வழங்கப்படுகிறதா :

(ஈ) அவை அடக்க விலைக்குள் விற்பனை செய்யப்படுகிறதா? ஆம் எனில் அடக்க விலைக்குள் விற்பனை செய்யப்படும் வகைகளை தெரிவிக்கவும் :

(ii) 1951 ஆம் ஆண்டு மலைத்தோட்ட தொழிலாளர் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் படி மழலையர் காப்பகத்திற்கு வகை செய்யப்பட்டுள்ளதா :

சேர்த்துக்கொள்ளப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை :

மழலை காப்பகத்தில் வழங்கப்படும் வசதிகள்

(a) பால் :

(b) உணவு

(c) உடைகள்

(d) விளையாட்டு பொம்மைகள்

(e) மருத்துவ உதவி

(f) மற்றவை

ஒவ்வொரு மழலையர் காப்பகத்திலும் பணியிலமர்த்தப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை:— :

(a) பயிற்சி பெற்ற ஆயா :

(b) பெருக்குபவர்கள்

**19.** நோயுற்ற நிலையில் கிடைக்கப்பெறும் சலுகைகள்:—

(i) நோயுற்ற நிலையில் சலுகை பெற வேண்டி விண்ணபித்த நபர்களின் எண்ணிக்கை :

(ii) நிராகரிக்கப்பட்ட நேர்வுகளின் எண்ணிக்கையும் அதன் காரணமும்

(iii) நோயுற்ற நிலையில் சலுகை பெறுவதற்கு அனுமதிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை மற்றும் செலுத்தப்பட்ட மொத்தத் தொகை :

**20.** பேறுகாலச் சலுகைகள்:—

| (i) சலுகைகள் | | சலுகை பெற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை | செலுத்தப்பட்ட மொத்த தொகை |
|---|---|---|---|
| (a) கருச்சிதைவு | : | | |
| (b) பிள்ளைப்பேற்று நிலை | : | | |
| (c) உடல் நலமின்மை | : | | |
| (d) மருத்துவச்சலுகை | : | | |
| (e) மொத்தம் | | : | |

*[அரசாணை (நிலை) எண் 242, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (D2)த் துறை, 8 டிசம்பர் 2016.]*

1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 14/1947) 38 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தில் பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார். இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 38 ஆம் பிரிவின் (1) உட்பிரிவில் முன்னரே வெளியிடப்பட்டுள்ளது.

**திருத்தம்**

மேற்சொன்ன விதிகளில், 70–ஆவது விதியில் (2) துணைவிதிக்குப் பின்னர் கீழ்க்காணும் துணைவிதி சேர்க்கப்பட வேண்டும். அதாவது:–

"(3) வழக்கிடை விண்ணப்ப மனுக்களில் ஆணையின் நகல் ஒன்றுக்காக விண்ணப்பிக்கிறவர், ஒரு தொழிலாளராக அல்லது தொழிலாளர்களாக அல்லது நேர்விற்கேற்ப தொழிலாளரின் அல்லது தொழிலாளர்களின் பிரதிநிதியான தொழிற்சங்கமாக ஒரு தரப்பினர் இருக்கிறவிடத்து, அவருக்கு, அத்தகைய ஆணையின் நகல் ஒன்று இலவசமாக வழங்கப்படும்."

**பி. அமுதா,**
*அரசு செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்**,
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.